# திராவிடத்தால் வாழ்கிறோம்

889

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

## உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

117

# எவரெஸ்ட் மு.கணேசன்

## இளைஞர் அணியின் தொடக்கக்கால பயணி!




**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த எவரெஸ்ட் மு.கணேசன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

1986-ஆம் ஆண்டு, மீண்டும் திணிக்கப்பட்ட இந்திக்கு எதிராக டிசம்பர் 1-ஆம் தேதி, சட்டநகல் எரிப்பு அறப்போராட்டத்தை அறிவித்தது தலைமைக் கழகம். போராட்டத்தின் முன்னெச்சரிக்கையாக ஒவ்வொரு ஊரிலும் கழக முன்னோடிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். கோவை மண்டலத்திலும் நிர்வாகிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால், அதற்கு அடுத்த நாளே ஈரோட்டில் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் கருத்தரங்க நிகழ்ச்சி இளைஞர் அணி - மாணவர் அணி சார்பாக நடத்தப்பட்டது. மாவட்டக் கழக தளகர்த்தர்கள் யாரும் இல்லாமலேயே, இன்றைய கழகத் தலைவர் - பொதுச்செயலாளர் ஆகியோர் கலந்துகொண்ட கருத்தரங்கத்தினை நடத்தி, கவனம் ஈர்த்தவர் எவரெஸ்ட் மு.கணேசன்.

1980-ஆம் ஆண்டு, கழக இளைஞர் அணி தொடங்கப்பட்டபோது, இளைஞர் அணி அமைப்புக் குழுவினருடன் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து பொதுக்கூட்டங்களிலும், செயல்வீரர்கள் கூட்டங்களிலும் கலந்துகொண்டு போர்ப்படைத் தளபதியாக இளைஞர் அணியை வளர்த்தெடுத்தார் இன்றைய கழகத் தலைவர் அவர்கள். அவருடன் பயணித்த, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்களில் திறம்பட செயல்பட்டு, தளபதியிடம் மட்டுமல்ல; கழகத் தலைவர் கலைஞர் வரை நற்பெயர் எடுத்தவர்களில் ஒருவர் எவரெஸ்ட் மு.கணேசன். பின்னாட்களில் இளைஞர் அணியின் மாநிலத் துணைச்செயலாளர்களில் ஒருவராக திறம்படச் செயல்பட்டவர்.

### மு.கணேசன் எவரெஸ்ட் கணேசன் ஆனார்

1952-ஆம் ஆண்டில், அன்றைய ஒருங்கிணைந்த சேலம் மாவட்டம், மேட்டூரில் பிறந்தவர் கணேசன். பெற்றோர் முத்துசாமி - நாகம்மாள். மேட்டூரில் பள்ளிப் படிப்பும், கோயம்புத்தூர் பி.எஸ்.ஜி. கல்லூரியில் பட்டமும் பெற்றார். சிவில் இன்ஜினீயரிங் முடித்த கணேசன் ஈரோட்டில் கழக அரசியல் பாடம் பயிலத் தொடங்கினார். அவரது அரசியல் பணிகள், இளைஞர் அணி வளர்ச்சி அடைந்து வந்த நேரத்தில் ஓய்வில்லாத களப்பணியாக மாறியது. எவரெஸ்ட் என்ற பெயரில் சிவில் வேலைகளுக்காக அவர் தொடங்கிய நிறுவனத்தின் பெயரிலேயே கணேசன். எவரெஸ்ட் மு.கணேசனாக அறியப்படலானார்.

அன்றைய ஈரோடு மாவட்ட இளைஞர் அணியின் முதல் மாவட்ட அமைப்பாளர். மூன்று முறை அந்தப் பொறுப்பில் இருந்தவர். ஈரோடு மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் இளைஞர் அணி கிளையை அமைத்தவர். ஈரோடு மட்டுமல்ல, சேலம், நாமக்கல், தர்மபுரி, கோவை, திருப்பூர் உள்ளிட்ட பத்து மாவட்டங்களுக்கும் இளைஞர் அணியின் கட்டமைப்புக்குத் துணை நின்றவர்.

இன்றைய ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம், தெற்கு மாவட்டச் செயலாளர் செந்தில்குமார், மாவட்டப் பொருளாளர் ப.க.பழனிசாமி, அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் அவருடன் பயணித்தவர்கள். ஒன்றிய, நகரச் செயலாளர்கள் பலரும் அவரிடம் பாடம் படித்தவர்கள்தான் என்கிறார்கள் ஈரோடு கழகத்தினர்.

### எத்தனை உயிர்களை இழந்தோம்

தலைமைக் கழகத்தின் அன்பகத்தை இளைஞர் அணிக்குப் பெற வேண்டும் என, இன்றைய கழகத் தலைவர் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து நிதி திரட்டியபோது, எவரெஸ்ட் கணேசனுடனான அந்த நாட்களை நினைவுகூர்கிறார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.ராஜன், “இளைஞர் அணி பணிக்காகச் சென்ற இடத்தில் ஒருமுறை பரிசல் பயணம் செய்தோம். தலைவருடன், ஈரோடு எவரெஸ்ட் கணேசன், அண்ணன் பொய்யாமொழி, பரிதி இளம்வழுதி ஆகியோர் இருந்தோம். பரிசல் ஓட்டும்போது, ‘எத்தனை எத்தனை உயிர்களை இழந்தோம்’ என்கிற கழகப் பாடலைப் பாடினேன். அது சோகப்பாடல். தலைவரும் பொய்யாமொழி அவர்களும் ரசித்துக்கேட்டு வருகின்றனர். அப்போது பரிசலின் சுழற்சியில் எவரெஸ்ட் கணேசன் மயக்கமாகிவிட்டார். பாடிக்கொண்டிருந்த நான் ‘எத்தனை எத்தனை உயிர்களை இழந்தோம்... இதோ எவரெஸ்டையும் இழந்தோம்’ எனப் பாட, சோகப்பாடலை ரசித்துக்கொண்டிருந்த தலைவர் வெடித்துச் சிரித்தார்” என குறிப்பிடுகிறார்.

இப்படி, தலைவருடன் பல பயணங்களைக் கொண்டிருந்தவர் எவரெஸ்ட் மு. கணேசன். அன்பகம் நிதிதிரட்டும் நிகழ்ச்சியாக முதன்முதலில் ஈரோட்டில் 5 லட்ச ரூபாய் அளித்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியவர்.

இளைஞர் அணிச் செயலாளர் ஈரோடு வந்தார் என்றால், அங்கிருந்து கொங்குப் பகுதி மாவட்டங்கள் முழுவதும் பயணப்படுவார். அவரோடு இணைந்து பயணித்தவர் எவரெஸ்ட் கணேசன். 1985 காலகட்டங்களில் இரவு பகல் பாராமல் தலைவரின் பயணங்களில் உடனிருந்தவர்.

> **“இளைஞர் அணியின் எழுச்சியில் என்றென்றைக்கும் எவரெஸ்ட் மு.கணேசன் பெயர் நிலைத்து நிற்கும்.”**

### எவரெஸ்ட் அலுவலகம்

வெளியூர்களில் இருந்து ஈரோட்டுக்கு வரும் கழகத்தினர், தகவல் அளிக்க வேண்டும் என்றால், எவரெஸ்ட் கணேசன் அலுவலகத்துக்குத்தான் தொலைபேசி செய்வர். எவரெஸ்ட் அலுவலகமே கட்சி அலுவலகமாக இயங்கியது. ஈரோடு வருகை தரும் கழகச் சொற்பொழிவாளர்கள் பலருக்கும் அவரது அலுவலகம்தான் தங்குமிடம். இளைஞர் அணியின் தொடக்கக் காலங்களில், இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் ஈரோடு வந்தால், எவரெஸ்ட் அலுவலகத்துக்குச் செல்லத் தவறியதே இல்லை.

1988-ஆம் ஆண்டில் எவரெஸ்ட் கணேசனுடன் முதன்முதலாக ‘அன்பகம்’ வந்த நினைவுகளை ‘இளைஞர் அணி அத்தியாயம் ஒன்று’ நூலில் பகிர்ந்துள்ள ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம், “கோபாலபுரத்தில் இளைஞர் அணிச் செயலாளரை சந்திக்கச் சென்ற நேரத்தில், தலைவரைப் பார்த்தோம். அவருக்கு அவ்வளவு மகிழ்ச்சி. எங்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் எவரெஸ்ட் கணேசனிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

### சீருடைப் பேரணி

இளைஞர் அணியின் தொடக்கக் காலத்தில் இருந்தே, கழக மாநாடுகளில் இளைஞர் அணியின் வெள்ளைச் சீருடைப் பேரணியும் தவறாமல் நடைபெறும். ஈரோடு, கோவை, நீலகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் வெள்ளைச் சீருடை அணிவகுப்பினை உணர்வுபூர்வமான நிகழ்ச்சியாக மாற்றியவர் கணேசன். சென்னையில், 1989-ஆம் ஆண்டு, தேசிய முன்னணி தொடக்க நிகழ்ச்சியிலும், கழகத்தின் தேர்தல் வெற்றி விழாவின்போதும் மிகப் பிரமாண்டமாக நடைபெற்ற இளைஞர் அணிப் பேரணியில் சிறப்பாகப் பணியாற்றினார் கணேசன். பேரணியினை வெற்றிகரமாக நடத்திக் காட்டியதற்காக தலைவர் கலைஞரிடம் விருதுபெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டார். தொடர்ச்சியாக இளைஞர் அணிப் பணிகளில் இயங்கி வந்தவர், 2010-ஆம் ஆண்டு உடல்நலக் குறைவினால் பாதிக்கப்பட்டதால், கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது குறைந்தது. இளைஞர் அணிச் செயலாளர் மருத்துவ உதவிகளில் கவனம் எடுத்தும், சிகிச்சை பலனின்றி 2011-ஆம் ஆண்டு நவம்பர் 20 அன்று இயற்கை எய்தினார். ஈரோடு மாநகர் முழுவதும் கழகத்தினர் திரண்டு அவருக்கு இறுதி விடையளித்தனர்.

கழகமும், தலைமையும் அவரை என்றென்றைக்கும் மறக்கவில்லை என்பதற்கு ஏற்ப, 2018-ஆம் ஆண்டு ஈரோடு மண்டல மாநாட்டின் முன் முகப்புக்கு, எவரெஸ்ட் மு.கணேசன் பெயர் சூட்டியது மாவட்டக் கழகம். 2022-ஆம் ஆண்டில் மாவட்டச் செயலாளர் செந்தில்குமார் இல்ல நிகழ்ச்சியில் பேசிய இன்றைய தலைவர், “எனக்கு உறுதுணையாக இருந்தவர், கொங்கு மாவட்டங்களில் என்னோடு பயணித்தவர்” என எவரெஸ்ட் மு.கணேசன் நினைவினைப் போற்றினார். இளைஞர் அணியின் எழுச்சியில் என்றென்றைக்கும் எவரெஸ்ட் மு.கணேசன் பெயர் நிலைத்து நிற்கும்.

...துடிக்கும்

---

## தேசியத்துக்கும் தேவை பெரியார்!




சாதி எதிர்ப்பு, சமூக நீதி மற்றும் ஜனநாயக உரிமைகள் சார்ந்த விவாதங்களில் தந்தை பெரியாரை, பிராந்திய அடையாளத்தில் இருந்து விடுவித்து, தேசிய அளவில் தேவைப்படும் அரசியல் சிந்தனையாளராகப் பார்க்கப்பட வேண்டும் என்கிற பார்வை தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகிறது. அந்தப் பார்வையை விரிவாகப் பேசும் நூல் எஸ்.வி.ராஜதுரையின் ‘பெரியார்: சாதி, தேசம் & சோசலிசம்’ (Periyar: Caste, Nation & Socialism). பெரியாரை சமகால அரசியலுக்குத் தேவையான தலைவராக பொருத்தும் வகையில், ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள இந்நூலை ‘பீப்பிள்ஸ் லிட்ரேச்சர்’ பதிப்பகம் வெளியிட்டுள்ளது.


மனித உரிமை செயற்பாட்டாளரும், எழுத்தாளருமான வித்யா பூஷன் மற்றும் எழுத்தாளர் எஸ்.வி.ராஜதுரை ஆகியோருக்கு இடையிலான உரையாடலின் அடிப்படையில் இந்நூல் உருவாகியுள்ளது. குறிப்பாக, டெல்லி, லக்னோ, கான்பூர், பம்பாய் மற்றும் புனே போன்ற வட இந்திய நகரங்களுக்கு, பெரியார் மேற்கொண்ட பயணங்கள், அவை சார்ந்த ஆவணங்கள் திரட்டித் தரப்பட்டுள்ளன. அந்த வகையில், வட இந்தியர்களுக்கும் பெரியார் சித்தாந்தத்தின் மீது ஈர்ப்பை ஏற்படுத்தும் முயற்சிக்கான வித்தாகவும் இந்நூல் திகழ்கிறது.

பெரியாரின் சாதி மற்றும் மதம் குறித்த தீவிர விமர்சனங்கள், பார்ப்பனிய எதிர்ப்பு, நாத்திகம், பகுத்தறிவு, சோசலிசம், கம்யூனிசம், நிலம், தொழிலாளர் அரசியல், தேசியவாதம் மற்றும் மொழிப் பிரச்சினை ஆகியவற்றில் அவர் கொண்டிருந்த நுணுக்கமான ஈடுபாடுகளை தமிழ் வாசிப்பு வெளிக்கு அப்பால் கடத்தும் முயற்சிகளில், புதிய உயரத்தை எட்டிப்பிடிக்கச் செய்திருக்கிறது இந்நூல்.

இந்தியாவின் ஜனநாயக மற்றும் சமூக நீதி கட்டமைப்பை வடிவமைக்க, அம்பேத்கர் மேற்கொண்ட முயற்சிகளை பெரியார் எவ்வாறு பாராட்டினார் என்பதையும், சாதி ஒழிப்பில் இரு தலைவர்களும் கொண்டிருந்த ஆழ்ந்த அர்ப்பணிப்பு உணர்வையும் ஆழமாக அலசுகிறது. பெரியாரை தலித் விரோதியாக சித்தரிக்கும் விமர்சனங்களும் இந்தத் தரவுகளால், சுக்குநூறாக உடைகின்றன. இந்தியா முழுமையும் கொண்டு சேர்க்கப்பட வேண்டிய அவசியமான நூல்.

---

## ஃப்ளாஷ்பேக்



பாவலர்
மா.மாடசாமி

### சோதனையான காலத்தில் கள ஆய்வு!

1993-ஆம் ஆண்டு கழகத்துக்கு சோதனை ஏற்பட்ட நேரத்தில், கிளைக் கழகங்களை ஆய்வு செய்ய, தலைமைக் கழகத்தின் சார்பில், குழுக்களை அனுப்பினார் தலைவர் கலைஞர். ஒருங்கிணைந்த விருதுநகர் மாவட்டத்தில் கழகச் செயல்பாடுகளை ஆய்வு செய்ய, அன்றைய நாடாளுமன்றக் குழுத் தலைவராக செயல்பட்ட சி.டி.தண்டபாணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சோ.கி.மூர்த்தி ஆகியோர் வருகை தந்தனர். திருவில்லிப்புத்தூரில் திருமண மண்டபத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், சுந்தர பாண்டியம் பேரூர் கிளையின் நிகழ்ச்சி நிரல் ஏடுகளை அவர்களிடம் சமர்ப்பித்தேன். உடன் அன்றைய மாவட்டச் செயலாளர் வே.தங்கபாண்டியன் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் இருக்கின்றனர்.

**– பாவலர் மா.மாடசாமி, முன்னாள் பேரூர் செயலாளர், சுந்தரபாண்டியம், விருதுநகர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## கருவூலம்

### அண்ணாவின் நாடகங்கள்!

பேரறிஞர் அண்ணா தமது ‘திராவிட நாடு’ அலுவலகத்தில் பணியாற்றிய ஊழியர்களைக் கொண்டும், தமது தோழர்களான சி.வி.இராசகோபால், சி.வி.எம்.அண்ணாமலை, போளூர் சுப்ரமணியம் ஆகியோருடன் சேர்ந்தும் நாடகங்கள் நடிக்கத் தொடங்கினார். ‘காஞ்சி மறுமலர்ச்சி நாடக மன்றம்’ என்ற பெயருடன் ‘வழக்கு வாபஸ்’, ‘சந்திரோதயம்’, ‘சிவாஜி கண்ட இந்து இராஜ்ஜியம்’ ஆகிய நாடகங்கள் மூலம் இயக்கத்திற்கு ஆதரவு திரட்டினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131